1982 பிப்ரவரி 11]

அதங்கோட்டாசானுக்கு நினைவுச் சின்னம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 144—**திரு. பொ. விஜயராகவன், திரு. டி. மணி**: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்க காலத்தமிழறிஞர் அதங்கோட்டு ஆசான் அவர்களுக்கு அவர் பிறந்த ஊரான கன்னியாகுமரி மாவட்டம் அதங்கோட்டில் நினைவுச் சின்னம் அமைக்க தமிழக அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அதங்கோட்டாசானுக்கு அவர் பிறந்த ஊரான கன்னியாகுமரி மாவட்டம் அதங்கோட்டில், சிலை ஒன்று நிறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. பொ. விஜயராகவன்: தலைவரவர்களே, அந்தச் சிலையினை நிறுவுவதற்கான இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கின்றதா ? அந்தச் சிலையில் வேலைகள் தொடங்கப்பட்டு விட்டனவா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, அந்தச் சிலையினை உருவாக்குவதற்காகவும், அதை நிறுவுவதற்காகவுமான அடிப்பீடங்கள் அமைப்பதற்காகவும் அரசு 65 ஆயிரம் ரூபாய் செலவிடலாம் என்று ஆணை பிறப்பித்திருக்கின்றது. கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு பகுதியில் கல்குளம் என்ற இடத்தைச் சேர்ந்த ஆதங்கோடு என்னும் இடத்தில் குழித்துறை-மாங்காட்டுச் சாலையின் சந்திப்பில் இருக்கின்ற சர்வே நம்பர் 475-ல் அமைக்கலாம் என்று அரசு தீர்மானித்திருக்கின்றது. ஆனால் அந்த அதங்கோட்டு ஆசான் அவர்களுடைய உருவத்தினை நிர்ணயிப்பதற்காக பரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இருந்ததால் தான் சிலை வைப்பதிலே தாமதம் ஏற்பட்டிருக்கின்றது. அதங்கோட்டு ஆசான் அவர்களின் ஆதாரபூர்வமான உருவமோ வேறு படங்களோ கிடைக்காத நிலைமையில் திருவள்ளுவர் கோட்டத்தில் வரையப்பட்டிருக்கின்ற அந்த உருவத்தின் அடிப்படையிலே அமைக்கலாமா என்று பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது. மேலும் தமிழ் அறிஞர்களிடத்திலே வேறு ஏதேனும் சான்று உருவங்கள் இருக்கின்றனவா என்று கேட்கப்பட்டு. அதற்கான பரிசீலனைகள் மேற்கொண்ட காரணத்தினாலேதான் அந்தச் சிலையினைநிறுவும் பணி தாமதமாகி இருக்கின்றது. இப்போது விரைவிலே அந்தப் பணி துவங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன்: தலைவரவர்களே, அதங்கோட்டு ஆசான் அவர்கள் பிறந்த இடமான அதங்கோட்டிலே இருக்கின்ற அந்த ஊர் மக்கள் அங்கே சிலை வைப்பதற்காக

ஒத்துழைப்புத் தருவதோடு கொஞ்சம் நிலத்தையும் தருவதற்கு தயாராக இருக்கிறார்கள். ஆகவே அந்த நிலத்திலே தமிழ் படிக்கின்ற வகையிலே ஒரு நூலகத்தையும் சேர்த்து வைத்தால் நன்றாக இருக்கும் என்று அங்குள்ள மக்கள் விரும்புகிறார்கள். அதற்கான நிலம் கூடத் தருவதற்கு அவர்கள் தயாராக இருப்ப தால் அதையும் சேர்த்து பரிசீலனை செய்து ஒரு நல்ல நூலகத் தினை அமைக்க அரசு முன்வருமா ?

(முற்பகல் 9-20).

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி மக்கள் வேறு சில இடங்களைச் சர்வே எண். 485/2, 638/2-ல் உள்ள பகுதிகளை யெல்லாம் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சிலர், மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல, இடத்தை தருவதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அங்கே நூல் நிலையம் போன்ற நிலையங்களை உருவாக்குவதைப் பற்றி இனி மேல்தான் அரசு பரிசிலனை செய்ய இருக்கிறது.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, சங்க காலத் தமிழறிஞர் அதங்கோட்டாசானுக்கு, கன்னியாகுமரி மாவட்ட மக்களின் நீண்டகால கோரிக்கையின் அடிப்படையில் நினைவுச் சின்னம் அமைக்கப் போவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடுகள் செய்வதைப் பற்றிச் சொன்னதற்கு நன்றி, ஆனால் கடந்த ஜனவரி மாதம் 18 செண்ட் நிலத்தை இலவசமாகக் கொடுத்ததாக தகவல்கள் இருக்கின்றன. ஆகவே அந்த இடத் தில் நினைவுச் சின்னம் எழுப்புகிற காலத்திலே, ஒரு 100, 200 பேர்கள் வந்து தமிழ் இலக்கியத்தைப் பற்றி ஆய்வு நடத்து வதற்கோ, தமிழ் படிப்பதற்கோ வசதியாக இருக்கும் பொருட்டு, ஒரு மண்டபத்தையும் சேர்த்துக் கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதங்கோட்டாசான் நினைவு மன்றத் தலைவர் திரு. கோவிந்தராசன் அவர்கள சர்வே எண். 485/2 என்ற இடத்தை சிலை நிறுவதற்காக அரசுக்கு இலவசமாக கொடுத்து அதற்கான இசைவும் தெரிவித்து ஒப்பந்தம் தந்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அந்த இடத்திலேயே சிலையை வைக்கலாம் என்ற கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அரசு முதலிலே சிலையை நிறுவுவதற்கான முயற்சிகளை மேற் கொண்டிருக்கிறது. சிலை நிறுவப்பட்டதற்குப் பிறகு அடுத்த திட்டமாக மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த ஆலோசனை களை எல்லாம் பரிசிலித்து எவ்வப்போது அந்த வசதிகள் ஏற் படுமோ அதைப் பார்த்து நிறைவேற்ற அரசு முயற்சிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன் :